No. of Printed Pages : 7

1004987

**5601**

பதிவு எண் | 0 | 1 | 4 | 4 | 7 | 7 |

*March 2016*

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language — Part I — TAMIL — Paper I

நேரம் : **3** மணி ] [ மதிப்பெண்கள் : **100**

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **VI**-க்கான விடைகள் மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

1. எட்டுத்தொகை நூல்கள் யாவை ?

2. உருவு கண்டு எள்ளாமை வேண்டும் - ஏன் ?

3. சிலப்பதிகாரம் கூறும் மூன்று உண்மைகள் யாவை ?

[ திருப்புக

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை ?

5. பாவேந்தரின் பிறப்பு, பெற்றோர் பற்றிக் குறிப்பு எழுதுக.

6. எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை இயற்றிய வேறு நூல்கள் யாவை ?

II. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

7. 'வாழிய வாழிய வென்றடி வாழ்த்துவமே' - என்று மொழியை வாழ்த்தியவர் யார் ? வாழ்த்தக் காரணங்கள் யாவை ?

8. வினைமேற் சென்ற தலைவனிடம் தூது வந்த பாணன் தெரிவித்த செய்தி யாது ?

9. அறிவுடையாரின் இலக்கணங்களாக வள்ளுவர் கூறியனவற்றை எழுதுக.

10. கவண் சுழற்றியவன் யார் ? அவன் உரைத்த மறுமொழி யாது ?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள் ?

III. பின்வரும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து வரிகளில்** விடை எழுதுக. 3x4=12

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்துக் கூறப்பட்டன யாவை ?

13. பெருமாள் உறை திருவேங்கடப்பதி குறித்துப் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் கூறுவன யாவை ?

14. இடம் சுட்டி விளக்குக. 'கன்றுகுரல் கேட்ட பசு போல'

15. நாயினேன் மறந்து என்னினைக்கேனே என்று சுந்தரர் உருகு மாற்றினை விளக்குக.

16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம் ?

IV. பின்வரும் வினாக்களுள் **ஏதேனும் ஒன்றனுக்கு** இருபது வரிகளில் விடை எழுதுக. 1x8=8

17. பொறையுடைமை பற்றி வள்ளுவர் கூறியுள்ள கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. மருண்மாலைப்போதில் கண்ணகி இணைந்து ஏங்கி உரைத்தனவும் கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் இருபது வரிகளில் வரைக.

19. மூலையில் கிடக்கும் வாலிபனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4x1=4

20. ''யாருமில்லைத் தானே கள்வன்

தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ''

(அ) இதில் கள்வன் எனக் குறிப்பிடப்பட்டவன் யாவன் ?

(ஆ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

(இ) இக் கூற்றமைந்த செய்யுளைப் பாடியவர் யார் ?

(ஈ) இப்பகுதி எந்நூலில் இடம் பெற்றுள்ளது ?

**அல்லது**

21. ''கண்டனென் கற்பினுக் கணியைக் கண்களால்''.

(அ) கண்டது யார் ?

(ஆ) யாரைக் கண்டான் ?

(இ) இவ்வரி இடம் பெற்ற நூல் எது ?

(ஈ) இந்நூல் ஆசிரியர் யார் ?

[ திருப்புக

VI. 22. ''ஏமவெற்பென்று'' எனத் தொடங்கும் மதுரைக் கலம்பகப் பாடலை அடி பிறழாமல் எழுதி அதன் பா வகையையும் எழுதுக. 4+2=6

23. ''நன்றி'' எனத் தொடங்கும் குறளையும் ''அரண்'' என முடியும் குறளையும் அடி பிறழாமல் எழுதுக. 2+2=4

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2x2=4

| | | |
|---|---|---|
| (அ) தோன்றி | (ஆ) வேண்டேன் | (இ) கொள்வர் |
| (ஈ) தொழுகிலன் | (உ) செய்த | (ஊ) புனைந்தோம் |

25. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

| | | |
|---|---|---|
| (அ) கயிலாய வெற்பு | (ஆ) தழீஇ | (இ) வைவேல் |
| (ஈ) சோணாடு | (உ) உயர் எண்ணம் | (ஊ) ஆனாத |

26. எவையேனும் **இரண்டு** தொடர்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

| | | |
|---|---|---|
| (அ) முள்ளிலை | (ஆ) மாசற்றார் | (இ) பொற்கொடி |
| (ஈ) தினையளவு | (உ) செழும்பொன் | (ஊ) தீக்குச்சி |

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

பொருண்மொழிக் காஞ்சி

**அல்லது**

நெய்தல் திணை

28. 'செம்பொற்கொடி அணையாள் கண்டாளைத் தான் காணான் 1x4=4
மல்லன்மா ஞாலம் இருள் ஊட்டி, மாமலை மேல்
செவ்வென் கதிர் சுருங்கிச் செங்கதிரோன் சென்றொளிப்ப'

- இப்பாடலடிகளில் பயின்றுவரும் அணியைச் சுட்டி விளக்குக.

**அல்லது**

சொற்பொருள் பின்வரு நிலையணி

**அல்லது**

எடுத்துக்காட்டு உவமை அணி - சான்று தந்து விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| | நூல் | | ஆசிரியர் |
|---|---|---|---|
| 29. | குயில் பாட்டு | - | அப்துல் ரகுமான் |
| 30. | அழகின் சிரிப்பு | - | சுரதா |
| 31. | துறைமுகம் | - | பாரதியார் |
| 32. | பால் வீதி | - | தாராபாரதி |
| | | - | பாரதிதாசன் |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **16x1=16**

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :
(அ) நக்கீரர் (ஆ) ஒட்டக்கூத்தர் (இ) இளங்கோவடிகள்

34. தமிழரின் வாழ்வியல் சிந்தனைகளைக் கருவூலமாகக் கொண்டு விளங்கும் நூல் :
(அ) அகநானூறு (ஆ) ஐங்குறுநூறு (இ) புறநானூறு

35. அகநானூறு நித்திலக்கோவையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை :
(அ) 100 (ஆ) 120 (இ) 180

36. 'வள்ளுவனைப் பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே' எனப் பாடியவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) கவிமணி (இ) பாரதியார்

37. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் :
(அ) 4 (ஆ) 9 (இ) 10

38. 'மாறி வருவன் ; மயங்காது ஒழிக' எனக் கூறியவர் யார் ?
(அ) கண்ணகி (ஆ) கோவலன் (இ) மாதரி

[ திருப்புக

39. சிறிய திருவடி என்று அழைக்கப்படுபவர் :
(அ) கருடன் (ஆ) அனுமன் (இ) வீடணன்

40. வீரமாமுனிவரின் தாய்நாடு :
(அ) தமிழகம் (ஆ) பிரான்சு (இ) இத்தாலி

41. "வருவேங் கடத்தும்பி யஞ்சல்" - இவ்வடியில் 'தும்பி' என்பது :
(அ) கஜேந்திரன் (ஆ) ஐராவதம் (இ) முதலை

42. முக்கூடற் பள்ளுக்குரிய பா வகை :
(அ) சிந்துப்பா (ஆ) ஆசிரியப்பா (இ) வஞ்சிப்பா

43. பெருமாள் திருமொழியில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை :
(அ) 105 (ஆ) 110 (இ) 115

44. தமிழகத்தின் வேர்ட்ஸ் வர்த் என்று பாராட்டப் பெறுபவர் :
(அ) பாரதிதாசன் (ஆ) வாணிதாசன் . (இ) தாரா பாரதி

45. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை :
(அ) 5 (ஆ) 7 (இ) 9

46. செந்தமிழை செழுந்தமிழாகக் காண விரும்பியவர் :
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) கம்பதாசன்

47. 'கன்னிபாலன்' எனப்படுபவர் :
(அ) வளன் (ஆ) தாவீது (இ) இயேசு

48. 'சின்னச்சீறா' என்ற நூலை எழுதியவர் :
(அ) உமறு புலவர்
(ஆ) குணங்குடி மஸ்தான்
(இ) பனு அகுமது மரைக்காயர்

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

49. எழுமை _________ உள்ளுவர் தங்கண்
விழுமம் _________ நட்பு.

50. துன்பம் உறவரினும் _________ துணிவாற்றி
_________ பயக்கும் வினை.

- o O o -